# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாந் தவணைப் பரீட்சை - 2023

| தரம் - 10 | தமிழ்மொழியும் இலக்கியமும் - I | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................

பகுதி - 1

1. வண்டோ கானத்திடை யிருந்து வந்து. இங்கு **வண்டு** என்பதன் ஒத்தசொல்
   (1) தேனி (2) ஆழி (3) ஞிமிறு (4) ஞமலி

2. விதியை நோவர் தம் நண்பரைத் தூற்றுவர். இங்கு **தூற்றுதல்** என்பதன் ஒத்தசொல்
   (1) பழித்தல் (2) தாக்குதல் (3) இகழ்தல் (4) ஏசுதல்

3. நாவலரோடு இணைந்து அவரிடம் மதிப்பு வைத்தவர் விசுவநாதபிள்ளை. இங்கு **இணை** என்பதன் எதிர்ப்பதம்
   (1) பிணக்கு (2) பிணை (3) விலகு (4) தனி

4. கதிகள் யாவும் தருமென. இங்கு **கதிகள்** என்பதன் எதிர்ப்பதம்
   (1) அமராபதி (2) அமைதி (3) நரகம் (4) சுவர்க்கம்

5. பாரிய வழக்குகளுக்கும் அப்பீல்களுக்கும் அவரை நியமிப்பது வழக்கம். இங்கு **நியமிப்பது** என்ற தொடர் தரும் கருத்து
   (1) அழைத்தல் (2) அமர்த்துதல் (3) அனுப்புதல் (4) அடக்குதல்

6. **பொருளால் வேறுபட்ட சொற்களைக் கொண்ட தொகுதி**
   (1) மூத்தோர் – சான்றோர் (2) புல்லர் - அறிவிலார்
   (3) உபாத்தியாயர் - ஆசிரியர் (4) தன்மையிலாளர் - குணமிலார்

7. **பின்வருவனவற்றில் பொருத்தமற்ற தொடர்**
   (1) தாமரை, கமலம், அம்புயம், முளரி (2) கான், அடவி, ஆரணியம், வனம்
   (3) தேன், மதுரம், நறவம், கள் (4) மண்டுகம், தவளை, சுரும்பு, நுணுல்

8. “சென்னை சர்வகலாசாலையார் முதன்முதல் நடத்திய **பீ.ஏ** பரீட்சையில் இருவர் சித்தியெய்தியவர்கள் ” இங்கு **பீ.ஏ(B.A)** என்ற பரீட்சையின் தமிழ் வடிவம்
   (1) கணிதமாணி (2) விஞ்ஞானமாணி (3) வர்த்தகமாணி (4) கலைமாணி

9. தாவித்தாவிப் பலபொருள் நாடுவர். இங்கு **தாவித்தாவி** என்பது
   (1) இணைமொழி (2) இரட்டைக் கிளவி
   (3) அடுக்குத்தொடர் (4) அடுக்கிடுக்குத் தொடர்

10. இந்த நேர்மையற்ற செயல் நாவலர் அவர்களில் இருதயத்தில் பெரும் நெருப்பைக் கொழுத்திவிட்டது. இங்கு **நெருப்பைக் கொழுத்துதல்** என்ற மரபுத்தொடர் தரும் கருத்து
    (1) வேதனை (2) பற்றவைத்தல்
    (3) சூடேற்றுதல் (4) எதிர்பார்ப்பு

11. ஒத்த கருத்துள்ள சொற்களால் அமைந்த இணைமொழி
    (1) இன்னார் - இனியார் (2) அறம் - மறம்
    (3) ஆதி – அந்தம் (4) குற்றம் - குறை

12. மதியினிற் புலை நாத்திகம் கூறுவர். இங்கு நாத்திகம் என்பது,
    (1) இறைவன் மறைந்திருக்கின்றார் என வாதிடுபவன்
    (2) இறைவன் உண்டு என வாதிடுபவன்
    (3) இறைவன் இல்லை என வாதிடுபவன்
    (4) இறைவன் பொய்யானவர் என வாதிடுபவன்

Education கல்வி



kalvi.lk

13. பகையுமின்றி நட்புமின்றி நடுநிலையில் நிற்போர்.
(1) நீதிபதி (2) நொதுமலாளர் (3) நடுவர் (4) தரகர்

14. "காத்திருந்து அவள் போகும் வழி கண்கள் பின்னழகார்ந்து களித்திட" என்ற தொடர் உணர்த்துவது
(1) வழிமேல் விழி வைத்து (2) வைத்த கண் வாங்காமல்
(3) கண்ணும் கருத்துமாய் (4) கண்ணுக்குக் கண்ணாக

15. பெடை, பெட்டை ஆகிய பெண்பால் மரபுப் பெயர்களைக் கொண்ட விலங்குகள் முறையே.
(1) பூனை, நண்டு (2) குதிரை, நாய்
(3) நாய், குதிரை (4) நண்டு, பூனை

- **பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க**

16. ககரம் **h** என்னும் ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிப்பது
(1) தாகம் (2) கடல் (3) தங்கை (4) கொல்லை

17. அதிமேதகு ஜனாதிபதி வருகை தந்தார்கள். என்பது,
(1) திணை வழுவமைதி (2) பால் வழுவமைதி
(3) எண் வழுவமைதி (4) கால வழுவமைதி

18. அம்மா குழந்தைக்காகப் பால் வாங்கினார் என்பது
(1) முதலாம் வேற்றுமை (2) இரண்டாம் வேற்றுமை
(3) மூன்றாம் வேற்றுமை (4) நான்காம் வேற்றுமை

19. பின்வருவனவற்றில் **நடவான்** என்பதன் இடைநிலை
(1) ட் (2) வ் (3) ஆ (4) ஆன்

20. "பின்வருவனவற்றில் கூட்டுவினையாக அமைவது
(1) கடற்கரை (2) வானொலி (3) முதலாளி (4) சரிபார்

21. யாழ்ப்பாணத்தவரேயாயினும் யாழ்ப்பாணத்துக்கு அவரைப்பற்றி ஒன்றும் தெரியாது. இங்கு இடம்பெற்ற **ஆகுபெயர்** பின்வருவனவற்றுள்
(1) பொருளாகு பெயர் (2) இடவாகு பெயர்
(3) காலவாகு பெயர் (4) சினையாகு பெயர்

22. இராமன் காட்டுக்குச் சென்றான்
இராமன் மானைப் பிடித்தான்
இவ் இரண்டு வாக்கியங்களையும் கூட்டுவாக்கியமாக மாற்றும் போது இங்கு இடம்பெற வேண்டியது
(1) ஆகவே (2) செய்து எச்சம் (3) செய்ய எச்சம் (4) ஆனால்

23. பின்னழகு என்பது எவ்வகைப் புணர்ச்சி
(1) இயல்புப் புணர்ச்சி (2) தோன்றல் புணர்ச்சி
(3) கெடுதல் புணர்ச்சி (4) விகாரப் புணர்ச்சி

- **பொருத்தமற்ற சொற்தொகுதி இடம்பெற்றுள்ள சொற்தொகுதியைத் தெரிவு செய்க**

24. (1) பெயர்ச் சொல் : மரம், கடல், மண், நீர்
(2) வினைச்சொல் : நட, வா, இரு, கல்
(3) இடைச்சொல் : இனி, மற்று, பிற, முன்
(4) உரிச்சொல் : சால, உறு, தவ, நனி



kalvi.lk

25. (1) ஆண்பால் : நம்பி, பாடினி, பாரி
(2) பெண்பால் : விதவை, தாதி, ஆய்ச்சி
(3) பலர்பால் : ஆடவர், மாணவர், பெற்றோர்
(4) பொதுப்பால் : விவேகி, மேதை, ஆசிரியர்

- **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

26. பாடசாலையின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது பாடசாலைச் சமூகத்தின் பொறுப்பாகும் என கல்வி அமைச்சால் பாடசாலைகளுக்கு ........................................... அனுப்பிவைக்கப்பட்டது
(1) துண்டுப்பிரசுரம் (2) அறிக்கை (3) சுற்றுநிருபம் (4) கடிதம்

27. ஒருபொருள் குறித்த பல சொல்லையும் பல பொருள் குறித்த ஒரு சொல்லையும் குறித்து நிற்பதை .................................................. என அழைப்பர்
(1) அகராதி (2) வாழ்வியற்களஞ்சியம் (3) கலைக்களஞ்சியம் (4) நிகண்டு

- **கீழே தரப்பட்ட பாடலை அடிப்படையாக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக**

தமிழ்மொழிக் குதவும் செல்வம்
தானாக வளர்தல் போதும்
கமழ்நறு மணத்தைப் பூக்கள்
கருவிலே பெற்றாற் போதும்
இமிழ்கடல் வயிற்றின் வெள்ளம்
இயற்கையாய் பெருகும்

28. இப்பாடலில் குறிப்பிடவந்த விடயம்
(1) ஒலி கடலின் வெள்ளம் (2) தமிழ்மொழியின் சிறப்பு
(3) பூக்களின் மணம் (4) கருவிலே திரு

29. கமழ் என்பது குறிக்கும் கருத்து
(1) தண்டு (2) கந்தம் (3) முத்தம் (4) கரு

30. கீழே, சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால், கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ. தமிழர்களின் முன்னோர்கள் அங்கெல்லாம் வாழ்ந்து வந்தார்கள்
ஆ. சிந்துவெளி பாரம்பரிய நகரம்
இ. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அந்த இடம் மண்மேடு இட்டுப்புதைந்து போனது
ஈ. மொகஞ்சொதாரோ என்னும் நகரம் அங்கே உண்டு

(1) ஆ, இ, அ, ஈ (2) ஆ, அ, ஈ, இ
(3) ஆ, ஈ, இ, அ (4) ஆ, ஈ, அ, இ

($^1/_2 \times 1 = 15$ புள்ளிகள்)



Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

## பகுதி 11

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

**1. சுருக்கமன விடை தருக**

1. விசுவநாதபிள்ளை, நாவலர் அவர்களுக்கு மூத்தவர். இங்கு இடம்பெற்ற எழுவாய் பயனிலைகளைக் குறிப்பிடுக
2. ''காத்தி ருந்தவள் போம்வழி'' இத்தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.
3. நீ நன்றாகப் படித்தால் பரீட்சையில் சித்தியடைவாய். இவ்வாக்கியத்தில் இடம்பெற்ற தலைமைத் தொடரையும் சார்புத்தொடரையும் குறிப்பிடுக.
4. பின்வரும் தொடருக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இட்டு மீண்டும் திருத்தமாக எழுதுக அது கிடக்க எடுத்துக் கொண்டு வா தந்தி தபால் கட்டுக்களை என்றார் நாவலர் அவர்கள்
5. ''ஆட்பெரும் படையொடு மன்னர்க்கிருக்க நிழலாகும்மே'' இத்தொடர் எத்தனையாம் வேற்றுமை

(5 புள்ளிகள்)

**2. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிந்து 200 - 250 சொற்களில் எழுதி பொருத்தமான தலைப்பும் இடுக.**

**(1)** " இன்று நமது நாட்டில் சவாலுக்கு உட்படுத்தப்படும் விடயம் சிறுவர் உரிமைகளாகும். சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுவதும், கல்வி முதலிய உரிமைகள் மறுக்கப்படுவதும் துஷ்பிரயோகங்களுக்கும் உள்ளாவதும் அதிகரித்தவண்ணமுள்ளன. இதற்கு அண்மைக்காலங்களில் இணையத்தளங்களின் வருகையும் அவற்றின் அதிகரித்த பயன்பாடும் காரணங்களாக அமைகின்றன. ஆனாலும் எதிர்கால சந்ததியினரின் வாழ்வு சிறக்கும் வகையிலும் சிறுவர் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையிலும் கருத்தமைந்த ஒரு **விளக்கக் கட்டுரை**.

**(2)** மனித நடமாட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாடுகளில் போக்குவரத்து இன்று அவசியமான காரணியாக விளங்குகின்றது. ஆனாலும் எரிபொருள் கிடைக்காமை, அதிகரித்த கட்டணம், வீதிவிபத்ததுக்கள் முதலியகாரணங்களால் போக்குவரத்து இன்று பாரிய பிரச்சினையைச் சந்தித்துள்ளது. இந்நிலையில் வீதிகளைச் செம்மைப்படுத்தல் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடித்தல் முதலிய காரணங்களால் போக்குவரத்துத் துறையைச் சீர்செய்யலாம் என்ற விடயங்கள் தொடர்பாக பாடசாலையின் சேவைக்கழக விழாவில் நீர் நிகழ்த்திய ஒரு **மேடைப் பேச்சு.**

**(3)** பாடசாலைக் கல்வியில் மாணவர்களுக்குக் களப்பயணம் முக்கியமான ஒன்றாகும். இவற்றுள் சுற்றுலா முக்கிய இடத்தினை வகிக்கின்றது. அண்மையில் நீங்கள் மேற்கொண்ட கல்விச் சுற்றுலா மூலம் எமது நாட்டின் சிறப்பம்சங்கள் பலவற்றைக் கண்டு களித்தீர்கள். இதன்போது நீங்கள் சென்ற இடத்தின் சிறப்பம்சம் வரலாற்று முக்கியத்துவம், ஆலய வழிபாடுகள் அந்தச் சமூகத்தின் பண்பாடு பழக்கவழக்கம் என்பவற்றை எடுத்துக் கூறும் **வர்ணனைக் கட்டுரை** ஒன்று எழுதுக.



kalvi.lk

(4) 'நண்பர் உலகம் பயன் தரும்' ஒன்று என உணர்ந்த கபிலன் பல சந்தர்ப்பங்களில் நண்பர்களால் பாதிக்கப்பட்டவனாக விளங்கினான். இவனை அவதானித்த இவன் தந்தை நண்பர்களின் மிகுதியான நெருக்கம் உயர்வான வழியைக் காட்டாது என அறிவுரைகள் பல கூறினார். இவற்றையும் பொருட்படுத்தாத கபிலன் இறுதியில் பல பரீட்சையில் வீழ்ச்சியைச் சந்தித்தான். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பதை உணர்ந்த கபிலன் வாழ்வின் உயர்வினை அடைந்தான் என்ற கருத்துப் புலப்பட **ஒரு சிறுகதை** எழுதுக

(15 புள்ளிகள்)

**3. பின்வரும் பந்தியை வாசித்து அதன் சாராம்சத்தை 20 – 25 சொற்களில் அமையுமாறு ஒரு சுருக்கம் எழுதுக. சுருக்கத்தின் இறுதியில் சொற்களின் எண்ணிக்கையகைக் குறிப்டுக**

இருபதாம் நூற்றாண்டு தமிழ்க் கவிதைக்கு வசந்த காலம். இந்தக் காலத்தில் வடிவத்திலும் வண்ணத்திலும் வாசத்திலும் வகை வகையான புதிய கவிதைப் பூக்கள் தமிழில் மலர்ந்தன. இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இந்த வசந்தத்தைப் பாடும் குயிலாக பாரதியின் குரல் ஒலித்தது. அவனே இந்த வசந்தத்தின் பூப்பாகவும், அதைப் பாடிய முதல் குயிலாகவும் இருந்தான். அரசர்களின் அந்தப்புரங்களில் ஆடிக்கொண்டிருந்த கவிதையை அவன்தான் சமூகத்தின் சேவகியாக்கினான். புலவர்களின் யாப்புப் பெட்டிக்குள் சிறைப்பட்டுக் கிடந்த கவிதையை அவன்தான் மக்களின் பொதுவுடைமை ஆக்கினான். பாரதியிடத்திலேதான் நாட்டுப்பற்றும் தேசியமும் முதன் முதலாக கவிதையின் பாடுபொருளாக அமைந்தன. நாட்டுப்பற்றை அவன் புதிய மதமாகவே ஆக்கினான். அவன் மக்களிடம் பேச விரும்பினான். எனவே எளிமையைக் கையாண்டான். பழம்பெரும் புலவர்களின் விருத்தங்களை விட மக்களின் பாடலான சிந்து வடிவத்திற்கு முக்கித்துவம் கொடுத்தான்

(5 புள்ளிகள்)

**4. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக**

அரிச்சுவடியிலுள்ள எழுத்து முறைப்படியே சொற்களை அமைப்பது தான் அகராதி முறை. இது நமக்கு மிக எளிதாகத் தோன்றுகிறது. ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வளர்ந்து வந்திருக்கின்ற தமிழ் இலக்கிய சரித்திரத்தில் இம்முறை 16 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தான் முதன்முதலில் புலப்படுகிறது. அப்பொழுதும் இது அரைகுறையாய்த்தான் கையாளப்பட்டது. சொல்லின் முதல் எழுத்து முறையையே ஆசிரியர்கள் நோக்கி வந்தனர். உதாரணமாக அறிவன், அடியான், அருள், அவன், அஃது, அமர் முதலிய சொற்களை முதல் எழுத்தாகிய அகரம் ஒன்றையே கருதி, அவற்றை ஒரு முறையில் நிறுத்தினர் இரண்டாவது முதலிய எழுத்துக்களைக் கருதினார்களில்லை இந்த முறையை அகராதி நிகண்டில் காணலாம். இதனால், அகரத்தில் தொடங்கும் ஒரு சொல்லை குறித்த ஓரிடத்தில் கண்டுபிடிப்பது எளிதாயில்லை. இரண்டாவது எழுத்தையும் நோக்கிச் சொற்களை முறைப்படுத்திய நூல் ஒன்று சுமார் நூறு ஆண்டுகளின் பின் தோன்றியது. இதன் பெயர் "அகராதி மோனைக் ககராதி எதுகை" என்பதாகும். இம்முறையிலேயும் ஒரு சொல்லைக் குறித்த இடத்தில் கண்டு பிடிப்பதற்கு வழி இல்லாமலிருந்தது.



kalvi.lk

I. அகராதி என்றால் என்ன?

II. **தமிழ் இலக்கிய சரித்திரம்** என்பதன் கருத்து யாது?

III. 16ஆம் நூற்றாண்டு தோற்றம் பெற்ற அகராதியில் உள்ள குறபாடு யாது?

IV. அதற்கு பந்தியில் கொடுக்கப்பட்ட காரணம் என்ன?

V. “அகராதி மோனைக் ககராதி எதுகை“ என்ற அகராதி முறையில் ஏற்பட்ட ஏமாற்றம் யாது?

(5 புள்ளிகள்)

**5. பின்வரும் பகுதியை வாசித்து 100 சொற்களில் எழுதுக**

உமது பிரதேசத்தில் கிராமிய உற்பத்திக்கான வழிகள் பல காணப்படுகின்றன. அவற்றை முன்னெடுப்பதற்கான முயற்சிகளில் மக்கள் ஈடுபட்டாலும் அதற்காக அரசாங்கத்தின் பங்களிப்புப் போதாமலுள்ளது. கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் க. குலதிலகன் என உம்மைக் கருதி கிராமிய உற்பத்திக்கான முயற்சிகளின் அவசியத்தை எடுத்துக் கூறி பிரதேச செயலரிடம் உதவி கோரும் வகையிலாக 75 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)

**பகுதி 111**

- முதலாம் இரண்டாம் வினாக்கள் உட்பட எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு விடை தருக

**1. சுருக்கமன விடை தருக**

1. எனக்கிந்தக் கதையை ஆயிரம் முறை சொன்னவர்கள் கூட்டத்தை நேரிற் கண்டவர்களும், அக்கூட்டத்தோடு தொடர்புபட்டவர்களும்
   (அ) **எனக்கு** என்பதால் குறிப்பிடப்பட்டது யார்?
   (ஆ) அக்கூட்டத்தோடு தொடர்புபட்டவர் யார்?

2. தண்டா மரையி னுடன் பிறந்தும் தண்தேன்
   நுகரா மண்டுகம்
   (அ) **தண்டா மரையி னுடன்** என்ற தொடரைச் சந்தி பிரித்து எழுதுக
   (ஆ) **மண்டுகம்** என்பதன் கருத்து யாது

3. கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே
   ளமிக்காரைச் சேர்தல் மிகமான முன் இனிதே
   (அ) **உரைத்தல்** என்றால் என்ன?
   (ஆ) **மிக்கார்** எனப்பட்டது யாரை?

4. இந்த இருவரில் தக்கவர் யாரென்று வாதிப்தற்குத் தான் அந்தப் பாரிய கூட்டம் விசுவநாபிள்ளையின் தலைமையில் நடந்தது.
   (அ) **இருவர்** எனப்பட்டோர் யார்?
   (ஆ) **பாரிய கூட்டம்** எங்கே நடைபெற்றது

5. யாத்த தேருருளைப்படு மேழைதான்
   யாண்டு தேர் செலுமாங் கிழுப்புற்றெனம்
   (அ) **யாண்டு** என்பது குறிக்கும் பொருள் யாது
   (ஆ) **மேழை** எனக் கூறப்பட்டது எதனை? (10 புள்ளிகள்)



kalvi.lk

**2. பின்வரும் செய்யுட் பகுதியையும் உரைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக**

I. யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்

(அ) யானை தன் பாகனையே கொல்லும் என்பதால் எடுக்கப்பட்ட முடிவு யாது?
(ஆ) நாயினிடத்தே காணப்படும் நன்றிபாராட்டுதல் தன்மை எத்தகையது?

II. சூழு மாய வுலகினிற் காணுறுந்
தோற்றம் யாவையும் மானத மாகுமால்
ஆழு நெஞ்சகத் தாசையின் றுள்ளதேல்
அதனு டைப்பொருள் நாளை விளைந்திடும்
தாழு முள்ளத்தர் சோர் வினர், ஆடுபோல்
தாவித் தாவிப் பலபொருள் நாடுவோர்,
வீழு மோரிடை யூற்றினுக் கஞ்சுவோர்
விரும்பும் யாவும் பெறாரிவர் தாமன்றே

(அ) இந்த உலகம் எப்படிப்பட்டதென பாரதியார் கூறுகின்றார்?
(ஆ) விரும்பும் யாவும் பெறாதவரின் இயல்புகள் எவையென விளக்குக?

III. வாதத்துக் கென்று வந்தவர்களில் இருந்தவர்கள் இருந்தே விட்டார்கள். எழுந்தவர்கள் வேறு வியாசம் பண்ணிக்கொண்டு வெளியிலே போய்விட்டார்கள். போனவர்கள் பின் உள்ளே வரவில்லை. தப்பித்துக்கொள்ள வழிவகையின்றித் தம்மை அறியாமலே வாய்குழறி அகப்பட்டுக் கொண்டவர்கள் தமது உடல் நடுங்க நாத் தழுதழுத்து,'பிறிற்றோ தக்கவர் அல்லர்' என்று தாமே சொல்லித் சமாதானப்பட்டுக்கொண்டார்கள். அன்று நடந்த கூட்ட நிகழ்ச்சியோடு பிறிற்றோவின் பிரதிநிதித்துவக் கதை நின்றுவிட்டது

(அ) வாதத்திற்கு வந்திருந்தவர்களின் நிலை எத்தகையது
(ஆ) வாத்திலிருந்து தப்பிக்க எண்ணியவர்களின் எண்ணம் எத்தகையது

(3 x 5 = 15 புள்ளிகள்)



kalvi.lk

**3,4,5, ஆம்** ஆகிய வினாக்ளில் எவையேனும் இரண்டு வினாவுக்கும் விடை தருக

3. **நீதிப்பாடல்களில்**

   (அ) அடக்கம் உடையாரதும் மனநிறைவான வாழ்வை உடையோரதும் இயல்புகளும்

   (ஆ) அதன்போது இடம்பெற்ற உவமையணிப் பயன்பாடும்

   இடம்பெற்றுள்ள வகையினைத் தெளிவுபடுத்துக

4. **நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில்**

   (அ) வை.விசுவநாதபிள்ளை தலைமை தாங்கிய பின்னணியையும்

   (ஆ) இலங்கைப் பிரதிநிதித்துவத்துக்கான போட்டியும் அதற்கான வாதமும்

   சித்திரிக்கப்பட்டுள்ள வகையினைத் தெளிவுபடுத்துக

5. **பாரதியார் சுயசரிதையில்**

   (அ) "கோர்த்த சிந்தனயோடு ஏகி அதில் மகிழ்கொண்டு" என பாரதி கூறுவதற்கும்

   (ஆ) ஞானியருடைய கருத்தும் அதில் தானும் உடன்படுகின்றேன் என பாரதி கூறுவதற்கும் காரணமாக அமைந்த விடயங்களை விளக்குக

(10 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**